# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1631/20 - 2009 දෙසැම්බර් 09 වැනි බදාදා - 2009.12.09

*1631/20 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைப் பிரமாணக்குறிப்பு

*அமைச்சரவையின் மூலம் 2009.10.28 ஆந் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட இலங்கை தகவல், தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் பிரமாணக் குறிப்பு கீழே தரப்படுகின்றது.*

டி. திசாநாயக்க,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,

பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07,
2009,திசெம்பர் 08.

1. **பிரமாணக் குறிப்பின் பெயர்**.- இப்பிரமாணக்குறிப்பு இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் பிரமாணக்குறிப்பென பொருள்படும்.

2. **வரைவிலக்கணம்** :

2.1 ''பிரமாணக் குறிப்பு'' என்பது இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை பிரமாணக் குறிப்பைக் குறிக்கின்றது.

2.2 ''செயலாளர்'' என்பது அரசாங்க நிர்வாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரைக் குறிக்கின்றது.

2.3 ''பணிப்பாளர்'' நாயகம் என்பது இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினைக் குறிக்கின்றது.

2.4 ''சேவை'' என்பது இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையைக் குறிக்கின்றது.

2.5 ''திருப்திகரமான சேவைக் காலம்'' என்பது பதவி உயர்வுக்கு விண்ணப்பிக்கும் திகதியிலிருந்து உடன் முந்திய சேவைக் காலத்தினுள் எல்லா சம்பள ஏற்றங்களினையும் உழைத்துப் பெற்றதும் அக்காலத்தினுள் ஏதேனும் குற்றம் பொருட்டு தண்டனைக்கு உட்படாமலும் (எச்சரிக்கை தவிர்ந்த) இருக்கின்ற சேவைக் காலத்தினைக் குறிக்கின்றது.

2.6 ''முனைப்பான சேவைக் காலப்பகுதி'' என்பது அரசாங்கத்தின் தேவைப்பாடுகள் அல்லது அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைவாக தமது பதவிக்கு ஏற்புடையதான சம்பளத்தை பெற்றுக் கொண்டும் தம்மிடம் கையளிக்கப்படும் கடமைகளில் உண்மையாக சேவையாற்றிய காலப்பகுதியும் ஆகும்.

**3. வலியுறுத்தல் :**

3.1 இந்தப் பிரமாணக் குறிப்பு இலங்கைத் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்ட அல்லது உள்ளீர்க்கப்பட்ட ஊழியர்களுக்கு வலியுறுத்தப்படல் வேண்டும். இலங்கைத் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைப் பதவிகள், பதவிகளினைத் தரப்படுத்தல் அட்டவணை I இல் காட்டப்பட்ட விதத்திற்கு அமைய இருத்தல் வேண்டும்.

3.2 சேவை அலுவலர்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஏற்பாடுகள், தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிகள், நிதி ஒழுங்கு விதிகள் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் விதிகள், ஒழுங்கு விதிகள் அல்லது இவை இரண்டிற்கும் உட்படல் வேண்டும்.

**4. செயல்வலுப் பெறும் திகதி :**

இப்பிரமாணக் குறிப்பு 01.07.2009 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**5. கட்டுப்பாடு :**

5.1 இச் சேவை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்புரைகளுக்கு அமைய இணைந்த பணிப்பாளர் நாயகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும்.

**6. கட்டமைப்பும் பதவியணியும் :**

6.1 (அ) நிறைவேற்று மட்டம் :

வகுப்பு 1 தரம் I
வகுப்பு 1 தரம் II
வகுப்பு 1 தரம் III

(ஆ) மூன்றாம் நிலை மட்டம் :

வகுப்பு 2 தரம் I
வகுப்பு 2 தரம் II

(இ) இரண்டாம் நிலை மட்டம் :

வகுப்பு 3 தரம் I
வகுப்பு 3 தரம் II
வகுப்பு 3 தரம் III

6.2 மேற்குறிப்பிட்ட வகுப்புகளுக்குரிய பதவிகள் அட்டவணை I இல் தரப்படுகின்றது.

6.3 ஒவ்வொரு வகுப்பு பொருட்டான அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு அமைச்சு அல்லது திணைக்களத்தின் தேவைப்பாட்டிற்கு அமைய இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஒருமைப்பாட்டுடன் முகாமைத்துவச் சேவை திணைக்களத்தினால் தீர்மானிக்கப்படும்.

6.4 ஒவ்வொரு வகுப்பின் தரங்களில் உள்ள பதவிகளின் எண்ணிக்கை இணைந்த பதவியணியாகக் கருதப்படும்.

6.5 ஆயினும் நியமனங்கள் சேவை தேவைப்பாடு பற்றி அட்டவணை 1 இல் பெயரிடப்பட்ட பதவிகளுக்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு மட்டும் வகுப்பு I/I இற்கு செய்யப்படல் வேண்டும்.

6.6 பொதுவாக நியமனங்கள் சேவையின் தரங்கள் 3/III, 2/II, 1/III, செய்யப்படுகின்றது. ஆயினும் உள்வாரியான தரமுயர்ந்தவர்கள் ஊடாக பதவி வெற்றிடங்கள் நிரப்புகின்றவிடத்து நியமன அதிகாரி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் சேவை வகுப்பு 1 இன் மற்றைய தரங்களுக்கு வெளிவாரியாக ஆட்சேர்ப்புச் செய்வர்.

**7. சம்பள அளவுத் திட்டமும் வினைத்திறமைகாண் தடையும் :**

7.1 உரிய சம்பள அளவுத் திட்டங்கள் பின்வருமாறு :-

| வகுப்பு | | சம்பள அளவுத் திட்டம் |
|---|---|---|
| (அ) நிறைவேற்று மட்டம் | - SL- 1- 2006 | ரூபா 22,935- 10X645-8X790- 17X1,050- ரூபா 53,555 |
| வகுப்பு 1 தரம் I | | ரூபா 36,755- 17X1050- ரூபா 53,555 |
| வகுப்பு1 தரம் II | | ரூபா 30,175- 8X790- ரூபா 36, 495 |
| வகுப்பு 1 தரம் III | | ரூபா 22,935- 10X645- ரூபா 29,385 |
| (ஆ) மூன்றாம் நிலை மட்டம் | - MN- 6- 2006- A | ரூபா 17,680- 10X320-11X 365-15X450- ரூபா 31,645 |
| வகுப்பு 2 தரம் I | | ரூபா 21,245- 10X365-15X 450 - ரூபா 31,645 |
| வகுப்பு 2 தரம் II | | ரூபா 17,680- 10X320- ரூபா 20,880 |
| (இ) இரண்டாம் நிலை மட்டம் | - MT- 1- 2006- A | ரூபா 14,425- 10X145-11X 170-6X240- 14X320- ரூபா23,665 |
| வகுப்பு 3 தரம் I | | ரூபா 17,985- 5X240-14X 320 - ரூபா 23,665 |
| வகுப்பு 3 தரம் II | | ரூபா 16,045- 10X170- ரூபா 17,745 |
| வகுப்பு 3 தரம் III | | ரூபா 14,425- 10X145- ரூபா 15,875 |

7.2 வகுப்பு 1 இன் தரம் I, II மற்றும் III,வகுப்பு 2 இன் தரம், II, வகுப்பு 3 இன் தரம் III இற்கு நேரடியாக ஆட்சேர்க்கப்பட்ட அலுவலர்கள் நியமனத் திகதியிலிருந்து 3 ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் 1 ஆவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். வினைத்திறமைகாண் தடை பரீட்சையில் சித்தியடைதல் சேவையில் உறுதிப்படுத்தப்படுதல் பொருட்டான கட்டாயத் தேவைப்பாடாக உள்ளது. (பாடத்திட்டங்கள், புள்ளியிடும் திட்டங்கள் முறையே அட்டவணைகள் 7,6 மற்றும் 5 இல் தரப்படுகின்றன).

7.3 வகுப்பு 3 இன் தரம் II இல் உள்ள அலுவலர்கள் 7 ஆண்டுக்குள் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். (பாடத்திட்டமும் புள்ளி வழங்கும் திட்டமும் அட்டவணை 8 இல் தரப்படுகின்றன).

7.4 வகுப்பு 2 இன் தரம் I இல் உள்ள அலுவலர்கள் 3 ஆண்டுக்குள் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் ஒன்றில் சித்தியடைதல் வேண்டும். (பாடத்திட்டமும் புள்ளி வழங்கும் திட்டமும் அட்டவணை 9 இல் தரப்படுகின்றன).

7.5 வகுப்பு 1 இன் தரம் III இல் உள்ள அலுவலர்கள் கணனி/தகவல் தொழில்நுட்பத் துறையில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா ஒன்றினை 10 வருடங்களுக்குள் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

7.6 அலுவலர்கள் அனைவரும் நியமனத் திகதியிலிருந்து 5 ஆண்டுகளுக்குள் சேவையில் சேர்ந்த அரச மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச மொழி தேர்ச்சியில் தேவைப்படும் மட்டத்தினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

8. ஆட்சேர்ப்புத் திட்டம் :

8.1 வகுப்பு 3 தரம் III :

8.1.1 தகைமைகள் :

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்ப முடிவு திகதி அன்று 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

(இ) சிறந்த குணநலனையும், உடல் ஆரோக்கியத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஈ) நாட்டின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

(உ) **கல்வித் தகைமைகள் :**

கல்விப் பொதுத்தராதரப் (சா/த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு மொழி, கணிதம், ஆங்கிலம் பொருட்டு திறமைச் சித்திகள் அடங்கலாக 5 திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அத்துடன்

க. பொ. த (உ/த) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தலும் வேண்டும் ;

(ஊ) **தொழில் தகைமை ;**

மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிடமிருந்து கணனி அறிவு தொடர்பாக கீழ்க் குறிப்பிட்டுள்ள ஆக்கக்கூறுக்களைக் கொண்டமைந்த 720 மணித்தியாலங்களுக்கு குறையாத பாடநெறியினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

(1) கணனி பயன்பாட்டுடன் அங்கீகரிக்கப்பட்ட செயற்படுத்தல் முறைமையின் கீழ் கடித கோவைகளை முகாமைத்துவம் செய்தல் ;

(2) கணனி சொல் முறை வழிபடுத்தல் ;

(3) பரவுத் தாள்கள் தயாரித்தல் மற்றும் பயன்படுத்தல் ;

(4) கணனி பயன்பாட்டுடன் சமர்ப்பித்தல் ;

(5) தரவுத் தள ஆக்கம் மற்றும் பயன்படுத்தல் ;

(6) இணையம் மற்றும் இலத்திரனியல் அஞ்சலை பயன்படுத்தும் ஆற்றல்.

8.1.2 **நியமிப்பு முறை :**

தெரிவுகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் ஒன்றின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் நியமன அதிகாரி அல்லது அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்ட பொருத்தமான பிற நிறுவனம் சார்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின்படி தகைமைகளினைப் பூர்த்தி செய்தவர்களிலிருந்து தெரிவுகள் மேற்கொள்ளப்படும். (பாடத் திட்டமும், புள்ளி வழங்கும் திட்டமும் அட்டவணை 2 இல் தரப்படுகின்றன.)

8.1.3 இந்தத் தரத்திற்கு புதிய நியமனங்கள் சேவைத் தேவைப்பாடுகளின் அடிப்படையில் நியமன அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

8. 2 **வகுப்பு 3 தரம் II இற்கு தரமுயர்த்தல் :**

8.2.1 சராசரிக்கு மேலான செயலாற்றுகையின் கீழ் தரமுயர்த்தல்கள் :

8.2.1.1. தகைமைகள் :

(அ) உரிய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(ஆ) முற்போந்த 5 வருடங்களின் பொழுது திருப்திரகமான முனைப்பான சேவைக் காலப்பகுதியினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகைத் தரங் கணிப்பு தொடர்பாக சராசரி மட்டத்திற்கு மேலாக கடமைகளின் செயலாற்றுகையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

8.2.1. 2 தரமுயர்த்தல் முறை :

வகுப்பு 3 தரம் II இற்குத் தரமுயர்த்துதல் பரீட்சையில் சித்தியடையும் திகதி அல்லது சேவையில் 6 ஆண்டுகள் பூர்த்தி செய்யும் திகதி இவற்றுள் எது பிந்தியதோ அதிலிருந்து நியமன அதிகாரி அல்லது நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் பொருத்தமான பிற நிறுவனம் சார்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் தகைமைப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். (பாடத் திட்டமும், புள்ளி வழங்கும் திட்டமும் அட்டவணை 10 இல் தரப்படுகின்றன)

8.2.2 சராசரி செயலாற்றுகையின் கீழ் தரமுயர்த்தல்கள் :

8.2.2.1 தகைமைகள் :

(அ) உரிய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(ஆ) வகுப்பு 3 தரம் III இல் முனைப்பான சேவையின் 10 ஆண்டுகள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தரமுயர்த்தல் பொருட்டு தகுதியாவதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியிலிருந்து 5 ஆண்டுகள் திருப்திரமான சேவைக்காலப் பகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை தரங்கணிப்பு முறைமையின் சராசரி மட்டத்தில் கடமைகளின் செயலாற்றுகையைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஈ) பந்தி 8.2.1.2 இல் தரப்பட்ட தகைமைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

8.2.2.2 தரமுயர்த்தல் முறை :

மேற்குறிப்பிட்ட தகைமையை நிறைவேற்றிய அலுவலர்கள் நேர்முகப் பரீட்சை மூலமாக தகுதியினைப் பரீட்சித்த பின்னர் வகுப்பு 3- II இற்கு தரமுயர்த்தப்படுவார்கள்.

**8. 3. வகுப்பு 3 தரம் I இற்குத் தரமுயர்த்தல் :**

8.3. 1. சராசரிக்கு மேலான செயலாற்றுகையின் கீழ் தரமுயர்த்தல் :

8.3.1.1 தகைமைகள் :

(அ) வகுப்பு 3 தரம் II இல் விதித்துரைக்கப்பட்ட வினைத்திறமை காண்தடைப் பரீட்சையில் சித்தியடைந் திருத்தல் ;

(ஆ) வகுப்பு 3 தரம் II இல் முனைப்பான சேவையின் 8 ஆண்டுகளினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை தரக்கணிப்பு முறைமையில் சராசரி மட்டத்திற்கு மேலான கடமைகளின் செயலாற்றுகையைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஈ) ஆகக் குறைந்தது தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமையின் (NVQ) மட்டம் 5 அல்லது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளப்பட்ட அதற்குச் சமனான வேறு தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும் ;

8.3.1. 2 தரமுயர்த்தல் முறை :

மேற்குறிப்பிட்ட தகைமையினை நிறைவேற்றிய அலுவலர்கள் நேர்முகப்பரீட்சை மூலமாக தகுதியுடைமையினைப் பரீட்சித்த பின்னர் வகுப்பு 3-1 இற்கு தரமுயர்த்தப்படுவார்கள்.

*8. 3.2. சராசரி செயலாற்றுகையின் கீழ் தரமுயர்த்தல்கள் :*

*8.3.2.1. தகைமைகள் :*

(அ) வகுப்பு 3 தரம் II இல் விதித்துரைக்கப்பட்ட வினைத்திறமை காண்தடைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(ஆ) வகுப்பு 3 தரம் II இல் முனைப்பான சேவையின் 10 ஆண்டுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தரமுயர்த்தல் பொருட்டு தகுதியாவதற்கு முன்னர் அந்தக் காலப்பகுதியிலிருந்து 5 ஆண்டுகள் திருப்திகரமான சேவையினைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(இ) மேலே 8.3.1.1 (ஈ) இல் கொடுக்கப்பட்ட தகைமையினை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

*8.3.2.2.* **தரமுயர்த்தல் முறை :**

நேர்முகப்பரீட்சை மூலமாக தகுதியினைப் பரீட்சித்த பின்னர் மேற்குறிப்பிட்ட தகைமைகளினை நிறைவேற்றிய அலுவலர்கள் வகுப்பு 3- 1 இற்கு தரமுயர்த்தப்படுவார்.

*8. 4.* ***வகுப்பு 2 தரம் II இற்கு நியமிப்பு/தரமுயர்த்தல் :***

*8.4.1. வெளிவாரி விண்ணப்பகாரர் பொருட்டான தகைமைகள் :*

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்ப முடிவு திகதியன்று 20 வயதிற்குக் குறையாதவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(இ) சிறந்த குணநலனையும் நல்ல உடல் ஆரோக்கியத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஈ) நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும் ;

(உ) **கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் :**

(1) கணனி விஞ்ஞானம் தகவல் தொழில்நுட்பத்தை ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் கணனித்துறையில் 3 ஆண்டுகால தொழில்சார் அனுபவத்தை பெற்றிருத்தல் ;

அல்லது

(2) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டம்

மற்றும்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணனி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் பட்டப்பின்படிப்பு டிள்ளோமா பெற்றிருத்தல் .

மற்றும்

கணனித் துறையில் 2 ஆண்டுகளிலான தொழில்சார் அனுபவம் பெற்றிருத்தல்

அல்லது

(3) ஆகக்குறைந்தது தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமையின் NVQ மட்டம் 7 அல்லது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும் . அதற்குச் சமமான வேறுத் தகைமையும் தகவல் தொழில்நுட்பத் துறையில் 3 ஆண்டு கால தொழில்சார் அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

*8. 4.2.* **உள்ளக விண்ணப்பக்காரரின் தகைமைகள் :**

உடன் முன்னதான 5 ஆண்டு காலப்பகுதியில் திருப்திகரமானதும் முனைப்பானதுமான சேவையுடன் வகுப்பு 3 தரம் I இல் 4 ஆண்டுகள் சேவையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

8.4.3. நியமிப்பு/தரமுயர்த்தல் முறை :

வகுப்பு 2 தரம் II இற்கான நியமிப்புக்கள்/ தரமுயர்த்தல்கள் நியமன அதிகாரி அல்லது நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்ட பொருத்தமான பிற நிறுவனம் சார்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின்படி மேற்கொள்ளப்படும். (பாடத் திட்டமும் புள்ளி வழங்கும் திட்டமும் அட்டவணை 3 இல் தரப்படுகின்றன.)

நிலவும்/உள்ள பதவி வெற்றிடங்களின் 60% உள்ளக விண்ணப்பக்காரரினால் நிரப்பப்படும். 40% நேரடியாக ஆட்சேர்ப்பு செய்வதன் மூலம் நிரப்பப்படும் . 60% பதவி வெற்றிடங்கள் அனைத்தையும் உள்ளக விண்ணப்பக்காரர்களிலிருந்து நிரப்ப முடியாத சந்தர்ப்பங்களில் உள்வாரியான தரமுயர்த்தல்களின் பின்னர் பதவி வெற்றிடங்களின் எஞ்சியவை வெளிவாரி விண்ணப்பக்காரர்களின் மூலம் நிரப்பப்படும்.

8.5. **வகுப்பு 2 தரம் I இற்கு தரமுயர்த்தல் :**

8.5.1 சராசரிக்கு மேலான செயலாற்றுகையின் கீழ் தரமுயர்த்தல்கள் :

8.5.1.1 தகைமைகள் :

(அ) விதித்துரைக்கப்பட்ட வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(ஆ) வகுப்பு 2 தரம் II இல் உடனடுத்து முன்னதான 5 ஆண்டுகள் திருப்திகரமானதும் முனைப்பானதுமான சேவைக்காலப்பகுதியினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை தரங்கணிப்பு முறைமையின் சராசரி மட்டத்திற்கு மேலாக கடமைகளின் செயலாற்றுகையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

8.5.1.2 தரமுயர்த்தல் முறை :

வகுப்பு 2 தரம் I இற்குத் தரமுயர்த்துதல் பரீட்சையில் சித்தியடையும் திகதி அல்லது சேவையில் 6 ஆண்டுகள் பூர்த்தி செய்யும் திகதி இவற்றுள் எது பிந்தியதோ அதிலிருந்து நியமன அதிகாரி அல்லது நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் பொருத்தமான பிற நிறுவனம் சார்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் தகைமைப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

(பாடத்திட்டமும் புள்ளி வழங்கும் திட்டமும் அட்டவணை 11 இல் தரப்படுகின்றன).

8.5.2 **சராசரி செயலாற்றுகையின் கீழ் தரமுயர்த்தல்கள்** :

8.5.2.1 தகைமைகள் :

(அ) உரிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(ஆ) வகுப்பு 2 தரம் II இல் முனைப்பான சேவையின் 10 ஆண்டுகள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தரமுயர்த்தல் பொருட்டு தகுதியாவதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியிலிருந்து 5 ஆண்டுகள் திருப்திகரமான சேவைக்காலப் பகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை தரங்கணிப்பு முறைமையின் சராசரி மட்டத்தில் கடமைகளின் செயலாற்றுகையைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஈ) பந்தி 8.5.1.2 இல் தரப்பட்ட தகைமைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

8.5.2.2 தரமுயர்த்தல் முறை :

மேற்குறிப்பிட்ட தகைமையை நிறைவேற்றிய அலுவலர்கள் நேர்முகப்பரீட்சை மூலமாக தகுதியினைப் பரீட்சித்த பின்னர் வகுப்பு 2-I இற்கு தரமுயர்த்தப்படுவார்கள்.

*8.6. வகுப்பு 1 தரம் III இற்கு நியமிப்பு/தரமுயர்த்தல் :*

*8.6.1 வெளிவாரி விண்ணப்பக்காரர் பொருட்டான தகைமைகள் :*

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்ப முடிவு திகதியன்று 22 வயதிற்குக் குறையாதவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(இ) சிறந்த குணநலனையும் நல்ல உடல் ஆரோக்கியத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஈ) நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும் ;

(உ) கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் :

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் கணனி விஞ்ஞானம்/தகவல் தொழில்நுட்பம்/கணனி பொறியியலில் அல்லது கணனி தொழில்நுட்பத்துடன் தொடர்புற்ற துறையில் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

(2) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு பட்டம் (முழுப்படிப்பின் மூன்றிலொரு பகுதி (1/3) கணனித் தொழில்நுட்பத்துறையில் இருத்தல் வேண்டும் ;

அத்துடன்

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும் கணனி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பவியல் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு டிப்புளோமா பெற்றிருத்தல் மற்றும் கணனித் துறையில் 3 வருட தொழில்சார் அனுபவம் பெற்றிருத்தல் ;

அல்லது

(3) தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமைகள் (NVQ) 7 ஆம் மட்டம் அல்லது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும் அதற்குச் சமமான வேறு தகைமைகளுடன் தகவல் தொழில்நுட்பத் துறையில் 5 ஆண்டுகால தொழில்சார் அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.

*8.6.2. உள்வாரி விண்ணப்பக்காரர்கள் பொருட்டான தகைமைகள் :*

(அ) சேவையின் வகுப்பு 2 இன் தரம் I இல் 5 வருட திருப்திகரமானதும் முனைப்பானதுமான சேவைக்காலப் பகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஆ) இந்தத் தரம் பொருட்டு விதித்துரைக்கப்பட்ட வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(இ) தற்போது அரசாங்க சேவை ஊழியர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று ;

(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணனி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும் .

*8.6.3. நியமிப்பு/தரமுயர்த்தல் முறை :*

(அ) நியமனங்கள் நியமன அதிகாரி அல்லது நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்ட பொருத்தமான பிற நிறுவனம் சார்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் செய்யப்படும் ;

(பாடத் திட்டமும், புள்ளி வழங்கும் திட்டமும் அட்டவணை 4 இல் தரப்படுகின்றன.)

*8.7.* ***வகுப்பு I தரம் II இற்கு தரமுயர்த்தல் /நியமிப்பு :***

*8.7.1. சராசரிக்கு மேலான செயலாற்றுகையின் கீழ் தரமுயர்த்தல் :*

*8.7.1.1. தகைமைகள் :*

(அ) விதித்துரைக்கப்பட்ட வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(ஆ) கணனி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(இ) தரமுயர்த்தல் பொருட்டு தகுதியாவதற்கு முன்னர் வகுப்பு 1 தரம் III இல் முனைப்பான சேவைக் காலப்பகுதியில் 6 ஆண்டுகளினையும் திருப்திகரமான சேவையில் 5 ஆண்டுகளினையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் .

*8.7.1.2. தரமுயர்த்துதல் முறை :*

தரமுயர்த்தல் நியமன அதிகாரி அல்லது நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் வேறு பொருத்தமான நிறுவனம் சார்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில் பரீட்சையில் சித்தியடையும் திகதி அல்லது ஆறு வருடங்களினைப் பூர்த்தி செய்யும் திகதி இவற்றுள் எது பிந்தியதோ அதிலிருந்து வகுப்பு 1 தரம் II இற்கு மேற்கொள்ளப்படும். (பாடத்திட்டமும் புள்ளி வழங்கும் திட்டமும் அட்டவணை 12 இல் தரப்படுகின்றது.)

*8.7.2. சராசரி செயலாற்றுகையின் கீழ் தரமுயர்த்தல் :*

*8.7.2.1. தகைமைகள் :*

(அ) விதித்துரைக்கப்பட்ட வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(ஆ) தரமுயர்த்தல் பொருட்டு தகுதியாவதற்கு முன்னர் வகுப்பு 1 தரம் III இல் முனைப்பான சேவையில் 10 ஆண்டுகளினையும் திருப்திகரமான சேவையில் 5 ஆண்டுகளினையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;

(இ) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை தரங்கணிப்பு முறைமையின் சராசரி மட்டத்தில் கடமைகளின் செயலாற்றுகையைக் கொண்டிருத்தல் வேண்டும் .

*8.7.2.2. தரமுயர்த்தல் முறை :*

மேற்குறிப்பிட்ட தகைமைகளை நிறைவேற்றிய அலுவலர்கள் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் தகுதியுடைமையைப் பரீட்சித்த பின்னர் வகுப்பு 1- II இற்கு தரமுயர்த்தப்படுவார்கள்.

***குறிப்பு :***

*1.* **வெளிவாரி விண்ணப்பக்காரர்கள் பொருட்டான தகைமைகள் :-**

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்ப முடிவு திகதியன்று 40 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும் ;

(இ) சிறந்த குணநலனையும் நல்ல உடல் ஆரோக்கியத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஈ) நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும் ;

(உ) ஆட்சேர்க்கப்படும் பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கு தேவைப்படும் விசேட தகைமைகளினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(ஊ) *கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் :*

கணனி விஞ்ஞானம்/தகவல் தொழில்நுட்பம் அல்லது கணனி பொறியியலில் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமைகள் (NVQ) 7 ஆம் மட்டம் அல்லது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும் அதற்குச் சமமான வேறு தகைமைகள் பெற்றிருத்தல் ;

அத்துடன்

கணனி விஞ்ஞானம்/தகவல் தொழில்நுட்பத்தில் ஒரு பட்டப்பின் படிப்புப் பட்டம்.

அத்துடன்

நிறைவேற்று பதவியில் உள்ள கணனித் தொழில்நுட்பத் துறையில் 6 ஆண்டுகள் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். (பட்டப்பின் படிப்பு பட்டம் பெற்றுக்கொண்ட பின்னர் மேற்கூறிய 6 ஆண்டுகள் இருத்தல் வேண்டும்).

2. **நியமிப்பு முறை** :

சேவை தேவைப்பாட்டின் பேரில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றினால் நடாத்தப்படும் படிமுறையில் அமைந்த நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில் சேவையின் வகுப்பு 1தரம் II இற்கு நியமனம் செய்யப்படும்.

**8.8 வகுப்பு 1 தரம் I இற்கு நியமிப்பு/தரமுயர்த்தல் :**

8.8.1. தகுதியுடைமை :

(அ) தரமுயர்த்தல் பொருட்டு தகுதியாவதற்கு முன்னர் வகுப்பு 1 தரம் II இல் 7 ஆண்டுகள் முனைப்பான சேவைக் காலப் பகுதியினைப் பூர்த்தி செய்திருத்தலுடன் 5 ஆண்டுகள் திருப்திகரமான சேவைக் காலப் பகுதியினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

8.8.2 தரமுயர்த்தல் முறை :

(அ) வகுப்பு 1 தரம் I இற்கு தரமுயர்த்தல்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றினால் தகைமைகளைப் பரீட்சித்த பின்னர் மேற்கொள்ளப்படும்.

**குறிப்பு** :

(1) **வெளிவாரி விண்ணப்பக்காரர் பொருட்டான தகைமைகள்** :

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்ப முடிவு திகதியன்று உச்ச வயதெல்லை 45 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும் ;

(இ) சிறந்த குணநலனையும் நல்ல உடல் ஆரோக்கியத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஈ) நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும் ;

(உ) ஆட்சேர்க்கப்படும் பதவியின் கடமைகளை ஆற்றுவதற்குத் தேவைப்படும் விசேட தகைமைகளினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(ஊ) கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்

கணனி விஞ்ஞானம்/தகவல் தொழில்நுட்பம் அல்லது கணனி பொறியியலில் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

கணனி விஞ்ஞானம்/தகவல் தொழில்நுட்பத்தில் ஒரு பட்டப்பின் படிப்புப் பட்டம்.

அத்துடன்

நிறைவேற்று பதவியில் கணனித் தொழில்நுட்பத் துறையில் 12 ஆண்டுகள் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். (பட்டப்பின் படிப்பு பட்டம் பெற்றுக் கொண்ட பின்னர் மேற்கூறிய 12 ஆண்டுகளில் 3 ஆண்டுகள் இருத்தல் வேண்டும்.)

2. ***நியமிப்பு முறை :***

(அ) வகுப்பு 1 தரம் I இற்கு தரமுயர்த்தல்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபை ஒன்றினால் தகைமைகளை பரீட்சித்த பின்னர் செய்யப்படும்.

9. **பதவியில் உறுதிப்படுத்தல் :**

9.1. வெளிவாரியாக ஆட்சேர்க்கப்படும் அலுவலர்கள் 03 ஆண்டுகள் காலப் பகுதி தகுதி கூர்நிலைக்கு உட்படுத்தப்படுவார்கள். 7.2. பந்தியில் தரப்பட்ட வினைத் திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர், தகுதி கூர்காலப் பகுதியில் அவர்களது கடமைகளும் நடத்தையும் திருப்திகரமானவை என நிரூபிக்கப்பட்டால் அத்தகைய அலுவலர்கள் தகுதிகூர் காலப் பகுதியின் இறுதியில் இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையில் உறுதிப்படுத்தப்படுவார்கள்.

9.2. உள்வாரியான தரமுயர்த்தல் திட்டங்கள் மூலம் நியமிக்கப்படும் அலுவலர்கள் தாபன விதிக் கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 11.3 ஆம் பிரிவின் நியதிகளின் படி ஒரு குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதி பொருட்டு பதில் நியமனத்திற்கு உட்படுத்தப்படுவார்கள். பதில் நியமனக் காலப் பகுதியின் பொழுது அவர்களது கடமைகளும் நடத்தையும் திருப்திகரமானவை என நிரூபிக்கப்பட்டால் அத்தகைய அலுவலர்கள் பதில் நியமன காலப் பகுதியின் முடிவில் இலங்கை தகவல் தொடர்பாடல், தொழில்நுட்ப சேவையில் உறுதிப்படுத்தப்படுவார்கள்.

10. **உள்ளீர்த்தல் :**

10.1 குறிப்பாக கணனி தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திற்கு ஏற்புடைய பதவிகள் மற்றும் தற்போது அப்பதவிகளுக்கு முறையாக ஆட்சேர்ப்புச் செய்துள்ள அலுவலர்களை பின்வரும் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவைக்கு உள்ளீர்க்கப்படும்.

10.1.1. உள்ளீர்ப்புச் செய்வதற்கு விருப்பம் தெரிவிப்பவர்கள் நிறுவனத் தலைவர் ஊடாக இப் பிரமாணக் குறிப்பில் முதலாம் அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ள படிவத்திற்கமைய விண்ணப்பமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

10.1.2 நிறுவனத் தலைவர் தம்மிடம் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களை இப்பிரமாணக் குறிப்பு வெளியிடப்பட்டு ஒரு மாத காலப்பகுதிக்குள் அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

10.1.3 இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வேறு கடித ஆவணங்கள் அல்லது விபரங்கள் கோருமிடத்து நிறுவனத் தலைவர் அவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

10.1.4 உள்ளீர்ப்புச் செய்யப்படும் அலுவலர்களுக்கு ஏற்புடையதாகும் வண்ணம் முறையான நியமனக் கடிதமொன்றை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்/இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோரால் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

10.1.5 உள்ளீர்ப்புச் செய்த பின்னர் தாபன விதிக் கோவையின் அத்தியாயம் VII பிரிவு 4 இன் பிரகாரம் சம்பளம் தீர்மானிக்கப்படும்.

10.1.6 தற்போது வகிக்கும் பதவி, தற்போது பெறுகின்ற சம்பளம், கடமைப் பொறுப்புக்களின் தன்மையும் பொறுப்பு, தற்போது வகிக்கும் பதவிக்கான பதவியின் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் கோரியுள்ள ஆகக் குறைந்த கல்வியும் மற்றும் தொழிற் தகைமைகள், விண்ணப்பதாரியால் பெற்றுக் கொண்டுள்ள கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு உள்ளீர்ப்புகளை மேற்கொள்வதால் விண்ணப்பத்தில் ஏற்புடைய விடயங்களை சரியாக குறிப்பிடுதல் விண்ணப்பதாரியினதும் நிறுவனத் தலைவரினதும் பொறுப்பாகும்.

11. **இடைக்கால ஏற்பாடுகள் :**

11.1. சேவையில் உள்ள அலுவலர்கள் பொருட்டு இப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளினை பிரயோகித்தல் பொருட்டு இந்தப் பிரமாணக் குறிப்பு செயல் வலுப் பெறும் திகதியிலிருந்து 3 ஆண்டு காலப் பகுதி அவகாசம் ஒன்று வழங்கப்படும். அவர்கள் இந்தக் காலப் பகுதியினுள் புதிய சேவைப் பிரமாணம் குறிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

11.2. இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைக்கு உள்ளீர்த்தல் பொருட்டு விருப்புரிமையை பிரயோகிக்காத ஓய்வூதியம் பெறத்தக்க நியமனம் பொருட்டு உரித்துடைய அலுவலர்கள் ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2 மற்றும் 7 ஆம் பிரிவுக்கு அமைவாக ஓய்வு பெறலாம். அவர்கள் தாம் புதிய சேவைக்குள் உள்ளீர்க்கப்பட விரும்பவில்லை என்பதனை தெரிவித்து வெளிப்படுத்துகை ஒன்றினை நியமன அதிகாரிக்கு, புதிய பிரமாணக் குறிப்பு வர்த்தமானியில் வெளிவரும் திகதியிலிருந்து 06 மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர், சமர்ப்பித்தல் வேண்டும். அதன் படி, அலுவலர் விருப்புரிமை தெரிவித்த திகதி, இறுதியாக சேவைக்கு சமூகமளித்த திகதி வரை அவர் ஏற்கனவே இருந்த சேவையில் தொடர்ந்தும் இருந்ததாகக் கருதி கிடைக்க வேண்டிய சம்பள ஏற்றங்களுடன் இறுதித் திகதிக்கு கிடைக்கக் கூடியதென உத்தேசிக்கின்ற சம்பளத்தின் பேரில் ஓய்வு பெற வைக்கப்படுவார். மேற்குறித்த நடைமுறை புதிய பிரமாணக் குறிப்பு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி முதல் 06 மாதங்கள் பூர்த்தியாகும் திகதியிலிருந்து வலுப்படமாட்டாது. ஏதேனும் காரணம் பொருட்டு 06 மாதங்களுக்குள் தனது விருப்புரிமையினைப் பிரயோகிக்காத அத்தகைய அலுவலர்கள் கட்டாயமாக ஓய்வு பெற வைத்தலுக்கு ஆளாவார்கள்.

12. **இடமாற்றம் :**

இடமாற்றங்கள் சேவை தேவைப்பாட்டின் பேரில் நியமன அதிகாரியினால் செய்யப்படலாம்.

13. **சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்காத ஏற்பாடுகள் பொருட்டான விடயங்கள் :**

சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்காத விடயங்கள் தொடர்பிலான தீர்மானங்கள் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்படும்.

***பின்னிணைப்பு 1***

**இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவைக்கு உள்ளடக்கப்படும்
பதவிப் பெயர்களின் அட்டவணை**

**வகுப்பு I இன் பதவிகள் :**

(அ) வகுப்பின் **1** தரம் I இன் பதவிகள்

| பதவிப் பெயர் | பதவி வெற்றிடங்கள் உள்ள நிறுவனம் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) | சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் | 01 |

(ஆ) வகுப்பு 1 தரம் II இன் பதவிகள்

| பதவிப் பெயர் | பதவி வெற்றிடங்கள் உள்ள நிறுவனம் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பிரதிப்பணிப்பாளர்(தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) | 1. சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் | 4 |
| | 2. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | 2 |
| | 3. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் | 2 |
| | 4. இலங்கைப் புகையிரதத் திணைக்களம் | 1 |
| | 5. தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்றுவித்தல் திணைக்களம். | 1 |

(இ) வகுப்பின் 1 தரம் III இன் பதவிகள் :

| பதவிப் பெயர் | பதவி வெற்றிடங்கள் உள்ள நிறுவனம் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| உதவிப் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) | 1. சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் | 14 |
| | 2. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | 01 |
| | 3. முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | 01 |
| | 4. கல்வி அமைச்சு | 01 |
| | 5. கல்வி வெளியீட்டுத் திணைக்களம் | 01 |
| | 6. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் | 06 |
| | 7. சுகாதார பாதுகாப்பு மற்றும் போஷாக்கு அமைச்சு | 06 |
| | 8. பொது நிர்வாக,உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 02 |
| | 9. காணி அமைச்சில் காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் பிரிவு | 01 |
| | 10. நிலவளவைத் திணைக்களம் | 01 |
| | 11. இலங்கை புகையிரதத் திணைக்களம் | 01 |
| | 12. மோட்டார் போக்குவரத்துத் | 01 |
| | திணைக்களம் | 02 |
| | 13. றப்பர் அபிவிருத்தித் திணைக்களம் | 02 |
| | 14. தேர்தல் திணைக்களம் | |

வகுப்பு 2 இன் பதவிகள்:

(அ) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர் தரம் I
(ஆ) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அலுவலர் தரம் II

வகுப்பு 3 இன் பதவிகள் :

(அ) தகவல் மற்றும் ; தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் தரம் I

(ஆ) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் தரம் II

(இ) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் தரம் III

வகுப்பு இரண்டு மற்றும் வகுப்பு மூன்று ஆகியவற்றின் பதவி எண்ணிக்கைகள் உள்ளீர்ப்பு பணிகளின்பின்னர் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

***பின்னிணைப்பு 2***

**இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதன் பொருட்டான திறந்த போட்டிப் பரீட்சை**

*(இந்த பிரமாணக் குறிப்பின் 8.1.2 பந்தி ஏற்புடையதாகும்.)*

1. *சேவைக்கு தெரிவு செய்தல் பொருட்டான திறந்த போட்டிப் பரீட்சை நியமன அதிகாரி சார்பாக பரீட்சை ஆணையாளரினால் அல்லது பிற நிறுவனத்தினால் நடாத்தப்படும்.*

2. ***பரீட்சை :***

   I. *சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.*

   II. *பரீட்சார்த்திகள் சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலம் பரீட்சைக்கு தோற்றுவதாயின் அவர்கள் அந்த மொழி மூலங்களுடன் ஆங்கில மொழியையும் பயன்படுத்தலாம்.*

3. *ஒவ்வொரு பாடம் பொருட்டான பாடங்களும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளும் கீழே தரப்பட்டுள்ளன. புள்ளிகள் தெளிவற்ற கையெழுத்து, எழுத்துப் பிழைகள் பொருட்டு குறைக்கப்படும்.*

   *பரீட்சை இரண்டு விடைத் தாள்களினைக் கொண்டிருக்கும்.*

| | *புள்ளிகள்* | *காலவரையறை* | *புள்ளிகள்* |
|---|---|---|---|
| (i) | *தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) பரீட்சை* | *02 மணித்தியாலங்கள்* | *100* |
| (ii) | *உளச்சார்பு பரீட்சை* | *01 மணித்தியாலயம்* | *100* |
| | *மொத்தப் புள்ளிகள்* | | *200* |

***<u>ICT</u> எழுத்துப் பரீட்சை :***

*இந்த வினாத்தாள் பரீட்சார்த்தியின் பொதுவான ICT அறிவினை பரீட்சிக்கும் வினாக்களினைக் கொண்டமைந்திருக்கும். இதில் பரீட்சார்த்திகள் எழுத்து வினாக்களையும் பல்தேர்வு வினாக்களையும் கொண்டமைந்திருக்கலாம். பரீட்சார்த்திகள் பணி செயல் முறைமை, மென்பொருள், வன்பொருள், சொல்முறை, வழிப்படுத்தல், பரவு தாள்கள், தரவுத் தள முகாமைத்துவம், இணையம், மின் அஞ்சல் போன்ற பகுதிகளில் பரீட்சிக்கப்படுவார்கள்.*

***உளச்சார்பு பரீட்சை :-***

*இந்த வினாத்தாள் பரீட்சார்த்தியின் புள்ளிவிபர ஆற்றலினை தர்க்கிக்கும் நியாயத்தினையும் பொது அறிவினையும் பரீட்சிக்கும் வினாக்களினைக் கொண்டமைந்திருக்கும்.*

*இந்த வினாத்தாள்கள் கடமைகள் பொருட்டான தகுதியுடைமையினையும் ஆற்றலினையும் பரீட்சிப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளன. இது திறந்த போட்டிப் பரீட்சையாக இருக்கின்ற போதிலும் பரீட்சார்த்தி ஒவ்வொரு வினாத்தாள் பொருட்டு ஒதுக்கப்பட்ட புள்ளிகளிலிருந்து ஆகக் குறைந்தது 40% த்தினையும் கூட்டு மொத்தப் புள்ளிகளின் 50% த்தினையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். நியமனம் ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவி வெற்றிடங்களினைப் பொறுத்து திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் ஒழுங்கிலேயே கண்டிப்பாகச் செய்யப்படும்.*

4. அவசியமேற்படின் இந்த ஒழுங்குவிதிகளும் ஏற்பாடுகளும் மீளாய்வு செய்யப்படலாம். பரீட்சை தொடர்பான நாளது வரைப்படுத்தப்பட்ட தகவல்களினதும் பாடத்திட்டத்தினதும் முழு விபரங்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் காலத்திற்குகாலம் வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

***பின்னிணைப்பு 3***

**இலங்கை தகவல், தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை**

(இப்பிரமாணக் குறிப்பின் 8.4.3 ஆவது பந்தி ஏற்புடையதாகும்)

1. சேவைக்கு தெரிவு செய்தல் பொருட்டான திறந்த போட்டிப் பரீட்சை நியமன அதிகாரி சார்பாக ஆணையாளரினால் அல்லது பிற நிறுவனத்தினால் நடாத்தப்படும்.

2. பரீட்சை:

   I. சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

   II. பரீட்சார்த்திகள் சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலம் பரீட்சைக்கு தோற்றுவதாயின் அவர்கள் அந்த மொழி மூலங்களுடன் ஆங்கில மொழியையும் பயன்படுத்தலாம்.

3. ஒவ்வொரு பாடம் பொருட்டான பாடங்களும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளும் கீழே தரப்பட்டுள்ளன. தெளிவற்ற கையெழுத்து, எழுத்துப் பிழைகள் பொருட்டு புள்ளிகள் குறைக்கப்படும்.

   பரீட்சை இரண்டு விடைத்தாள்களினைக் கொண்டிருக்கும்.

| | | காலவரையறை | புள்ளிகள் |
|---|---|---|---|
| (i) | தகவல் தொடர்பாடல் தொழினுட்ப (ICT) எழுத்துப் பரீட்சை | 02 மணித்தியாலங்கள் | 100 |
| (ii) | உளர்ச்சார்பு பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 |

**ICT எழுத்துப் பரீட்சை** :

இந்த வினாத்தாள் பரீட்சார்த்திகளின் நல்ல முகாமைத்துவ இயலுமைகளுடன் பொதுவான ICT அறிவைப் பரீட்சிக்கும் வினாக்களினைக் கொண்டிருக்கும். இது பல்தேர்வு வினாக்களினை போன்றே எழுதும் வினாக்களினையும் கொண்டமைந்திருக்காலம். பரீட்சார்த்திகள் ICT இன் அடிப்படைகள், கணனி கட்டடக்கலையும் செயற்படுத்தல் முறைமையும், மென்பொருள், வன்பொருள், தரவு தொடர்பாடலும் வலையமைப்பும், உள்ளக வலைப்பின்னலும் சர்வதேச வலைப்பின்னலும் அபிவிருத்தியும் இணையத்தளவிருத்தியும் ஒன்லைன் சேவைகளும் அலுவலகப் பிரயோக பொதியகம் போன்ற விடயப்பரப்புகளில் பரீட்சிக்கப்படுவார்கள்.

*உளச்சார்புப் பரீட்சை :*

இந்த வினாத்தாள் பரீட்சார்த்தியின் புள்ளிவிபர ஆற்றலினை தர்க்கிக்கும் நியாயம், பொது அறிவைப் பரீட்சிக்கும் வினாக்களினைக் கொண்டமைந்திருக்கும்.

இந்த வினாத்தாள்கள் கடமைகள் பொருட்டான தகுதியுடைமையினையும் ஆற்றலினையும் பரீட்சிப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளன. இது திறந்த போட்டிப்பரீட்சையாக இருக்கின்ற போதிலும் பரீட்சார்த்தி ஒவ்வொரு வினாத்தாள் பொருட்டு ஒதுக்கப்பட்ட புள்ளிகளிலிருந்து ஆகக்குறைந்தது 40% புள்ளிகளை பெற்றுக் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் பரீட்சையின் மொத்துப் புள்ளிகளின் ஆகக் குறைந்தது 50% பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். நியமனம் ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவி வெற்றிடங்களினைப் பொறுத்து திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் ஒழுங்கிலேயே கண்டிப்பாகச் செய்யப்படும்.

4. அவசியமேற்படின் இந்த ஒழுங்கு விதிகளும் ஏற்பாடுகளும் மீளாய்வு செய்யப்படலாம். பரீட்சை தொடர்பான நாளதுவரைப்படுத்தப்பட்ட தகவல்களினதும் பாடத்திட்டத்தினதும் முழு விபரங்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் காலத்துக்கு காலம் வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

***பின்னிணைப்பு 4***

**இலங்கை தகவல், தொடர்பாடல் தொழினுட்ப சேவையின்**
**வகுப்பு 1 தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான**
**திறந்த போட்டிப் பரீட்சை**

*(இப்பிரமாணக் குறிப்பின் 8.6.3 ஆவது பந்தி ஏற்புடையதாகும்)*

1. இந்த சேவைக்கு தெரிவு செய்தல் பொருட்டான திறந்த போட்டிப் பரீட்சை நியமன அதிகாரி சார்பாக பரீட்சை ஆணையாளரினால் அல்லது பிற நிறுவனத்தினால் நடாத்தப்படும்.

2. ***பரீட்சித்தல் முறை :***

I. பின்வரும் பாடங்களில் எழுத்துப் பரீட்சை ஒன்று :-

| | பாடங்கள் | காலவரையறை | புள்ளிகள் |
|---|---|---|---|
| (அ) | பொது விவேகம் | 1 மணித்தியாலம் | 100 |
| (ஆ) | ICT கிரகித்தல் | 2 மணித்தியாலங்கள் | 100 |
| (இ) | ICT முகாமைத்துவம் பொருட்டான உளச்சார்பு | 2 மணித்தியாலங்கள் | 100 |
| | | மொத்தப் புள்ளிகள் | 300 |

பரீட்சார்த்திகள் அனைவரும் அனைத்து விளாத்தாள்களிற்கும் தோற்றுதல் வேண்டும் என்பதுடன் வாய்மொழிப் பரீட்சை பொருட்டு தகைமை பெறுவதற்கு ஒவ்வொரு வினாத்தாள்களிலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

II. படி முறையில் அமைந்த வாய்மொழிப் பரீட்சை – 100 புள்ளிகள்

